## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண்.21/2016

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு.T. சோழவேந்தன் B.A.,B.L.., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிராமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி : | 21.03.2023 | தந்தை பெயர் : | அருணாசலம் |
| பெயர் : | சின்னதுரை<br>(PW- 1 cross ) | தாலுக்கா : | சீர்காழி |
| கிராமம் : | திருநன்றியூர் | சமயம் : | |
| சாதி : | | வயது : | 74/2023 |
| தொழில் : | | | |

**<u>குறுக்கு விசாரணை : 21.03.2023.</u>**

நான் ஓய்வுபெற்ற ஆசிரியர். வா.சா.ஆ.1 ஆனது கிருஷ்ணமூர்த்தி ஐயரிடமிருந்து தங்காயால் வாங்கிய கிரய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி தங்காயால் 24.11.1992ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தங்காயாலின் வாரிசு சான்று இவ்வழக்கில் தாக்கல். செய்வில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்காயாலுக்கு நானும் கலியமூர்தியும் வாரிசுகள் என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு என்ன உறவுமுறை என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் தாவா பிராதில் தங்காயால் சொத்து எவ்வாறு எனக்கு பாதியபட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பத்திரமூலம் பாத்தியபட்டது என்று சொல்லியுள்ளேன்.

கிரய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன். அந்த கிரய பத்திரம் 1941 ம் ஆண்டு ஏற்பட்டது. நான் 1946 வருடம் பிறந்தேன். ஆதனால் நான் 1941ல் வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா நான்கெல்லை ரோட்டிற்கு மேற்கு, அரிகிருஷ்ண்ணன் இடத்திற்கு கிழக்கு, செல்வராஜ் மனைக்கு வடக்கு, லெட்சுமி அம்மாள் மனைக்கு தெற்கில் உள்ளாதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன். மேற் சொன்ன நான்கெல்லை தரவி

வேறு நான்கெல்லை தாவா பிராதில் குறிப்பிட்டபட்டுள்ளது இருந்தால் அது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் நான் தற்போது சொன்ன நான்கெல்லைதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 அடி அகலம், 60 அடி நீளத்திற்கு பிரதிவாதி பள்ளம் வெட்டி விட்டதால் அதை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர கோரி தாவா தொர்ந்துள்ளேன். மேற்படி பரிகாரத்தை தவிர வேறு பரிகாரம் தாவா பிராதில் கோரியிருந்தால் தவறு என்றால் சரிதான். நான் ஏற்கனவே இந்த வழக்கில் நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டுவிட்டதாக இடைமனு எண்.1336/2018 தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இல்லை எனறும் தவறாக  உத்தரவு பெற்று அதன் போரில் நீதிமன்ற அவமதிப்பு மனு தொடா்ந்தேன் என்றால் சரியல்ல.

தாவா சொதததது முழுவதும் எந்த காலத்திலும் என்னுடைய சுவாதீன அனுபவத்னத்தில் இல்லை என்றும் அதை மறைத்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்க தக்கது  அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும், அனுபவும் இல்லை என்பதால் தாவா தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் நான்கெல்லைககள் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தங்காயாலின் உறவு முறையை மறைத்து தாக்கல் செய்துள்ள பிரதின் அடிப்படையில் எவ்வித  அனுகூலமும் வா.சா.ஆ.7ன் மூலம் பெறஇயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என  தாவா பிராதில் ஒருவயிலும் சாட்சியத்திலும் வேறு வகையிலும் சொல்லியுள்ளதால் எவ்வித பரிகாரமும் கிடைக்க  தக்கதல்ல என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் என்னுடைய உரிமை மூலத்தை நிருப்பிக்காததால் வா.சா.ஆ.1 ன் மூலம் எந்த விதமான அனுகூலமும் பெற இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 தங்காயம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ளது. தாவா பிரதாதில் தாவா சொத்திற்கான மின் இணைப்பு தங்காயால் பெயரில் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.  நான் இறந்துபோன தங்காயாலின்

வாரிசு என்றால் என் பெயரில் மின் இணைப்பு மாற்றி இருப்பேன் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வளர்ச்சியின் பொறாமையின் காரமணாக பொய் வாழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாணை இல்லை.</u>**